
# ஆத்மஜோதி



நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை

பரிதாபி ஹூ புரட்டாதி - ஐப்பசி 1972





ஓர் ஆத்மீக மாத வெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே. — சுத்தானந்தர்

ஜோதி-24 பரிதாபி ஸ்ரீ புரட்டாதி—ஐப்பசி மீ 1ம் உ [17-10-72] சுடர்-11-12

## பொருளடக்கம்


| | |
|---|---|
| வாழ்த்து | —245 |
| நெஞ்சொடு இரங்கல் | —246 |
| நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை | —247 |
| ஆத்ம சாதனம் | —252 |
| அருளுடல் அல்லது நித்திய சரீரம்-2 | —255 |
| இறைவழிபாட்டின் அவசியம் | —260 |
| ஸூபியாக்கள் காட்டும் சுகநிலை | —262 |
| இயற்கையே சோதிடம் 22-ம் பாடம் | —265 |
| இறைவனைத் தொழுதால் எவ்வினையும் நீங்கும் | —271 |
| தேவி மகிமை | —276 |



## ஆத்மஜோதி சந்தா விபரம்

ஆயுள்சந்தா 100-00
வருட சந்தா 5-00
தனிப்பிரதி சதம் 50

கௌரவ ஆசிரியர் திரு. க. இராமச்சந்திரா
பதிப்பாசிரியர் திரு. நா. முத்தையா

ஆத்மஜோதி நிலயம்,
நாவலப்பிட்டி போன்: 353


# வாழ்த்து

இற்றைத் தமிழன் இதயத் துடிப்பினை இச்
சொற்றகு சித்திரத்தில் தோன்றவைத்தான் - கற்றறிந்த
ஓவிய நற்கலைஞன் ஓதுபுகழ் நாமக்கல்
பாவலன் ராமலிங்கம் பார்!

சிந்தையினால் வாக்கதனால் செய்கைதன்னால்
தேசத்திற் கோயாது தொண்டு செய்தோன்
முந்தும் அன்பே உருவாக வந்த மூர்த்தி
மூதறிஞன் காந்திமகான் வழிபின்பற்றிச்
செந்தமிழ்நாட் டாஸ்தான கவிஞனாகிச்
சீரோங்கி ராமலிங்க நண்பனே நீ
சந்ததமும் இவ்வுலகில் வாழச் செந்தில்
சண்முகனை வேண்டிநிதம் போற்றுவேனே.

—தேசிகவிநாயகம்பிள்ளை

"நும்மின் கவிகொண்டு நும்நும் இட்டா தெய்வம் ஏத்தினால்
செம்மின் சுடர்முடி என் திருமாலுக்குச் சேருமே"

என்று ஆழ்வார் பாடிய படிக்கு எங்கள் நாமக்கல் இராமலிங்கப்பாவலர் தேசத்தையே தன் இஷ்ட தெய்வமாகக் கொண்டு உள்ளம் உருகிப் பாடிவருகிறார். பல வருஷங்களாக நானும் அனுபவித்து வருகிறேன். ஆனால் அதை வெளியே சொல்ல, அவர் கவிக்கு எவ்விதத்திலோ நானும் உட்சம்பந்தப்பட்டவனாக ஓர் அர்த்தமற்ற கருத்து என்னைப் பின்னுக்கு இழுக்கிறது.

பல ஆண்டுகளுக்கு முன் எழுதிய உயர்ந்த தமிழைத் தலைமேல் வைத்துப் பூசனை செய்து அனுபவிக்கவேண்டும். ஆனால் நம் நாளிலேயே நம்முடனேயே இருந்து நம்முள்ளத்தின் துடிப்புகளைப் பொருத்திப் பாடப்பட்ட தமிழையும் விட்டுவிடக்கூடாது. கண்ணில் ஒற்றி அன்பு செலுத்த வேண்டும். இப்போதுதான் பூத்தபூ. அன்பின்றித் தொட்டால் வாடிப்போகும்.

—இராஜகோபாலாச்சாரி

# நெஞ்சொடு இரங்கல்

(நாமக்கல் கவிஞர்)

பல்லவி

ஒருநாளைக் கொருதரம் ஒருநொடிப் பொழுதேனும்
உன்னைப் படைத்தவனை எண்ணிச் சுகித்ததுண்டோ
—மனமே

அநுபல்லவி

திருநாளும் தேரும் என்று தேடியலைந்ததல்ல
சிந்தனை அலையாமல் தியானத்தில் நிறுத்தியே (ஒரு)

சரணம்

விடியுமுன் விழித்தனை வெளுக்குமுன் வீட்டைவிட்டாய்
வெவ்வேறு இடத்துக்கு வௌவால்போல் ஓட்டமிட்டாய்
உடலும் மனமும் சோர்ந்து ஓய்ந்திட வீடுவந்தும்
உண்ணும் பொழுதுங்கூட எண்ணம் நினைப்பதில்லை (ஒரு)

அரைக்காசுக் காணாலும் ஒருநாள் முழுதுங் காப்பாய்
ஆயிரம் பேரையேனும் அலுப்பின்றிப் போய்ப் பார்ப்பாய்
உரைப்பார் உரைகட்கெல்லாம் உயர்ந்திடும் செல்வனை
உன்னுள் இருப்பவனை எண்ணிட நேரமில்லை (ஒரு)

சிலநாளைக் கதிகாரம் செய்யும் ஒருவர்க் கஞ்சி
செய்யச் சொல்வதையெல்லாம் செய்வாய்நீ பல்லைக் கெஞ்சி
பலநாளும் ஜென்மமெல்லாம் பாலிக்கும் அதிகாரி
பரமனை நினைக்கவும் ஒருகணம் உனக்கில்லை (ஒரு)

நாளும் கிழமை என்று நல்லவர் உரைத்தாலும்
நாளைக்கு ஆகட்டும் வேலை அதிகமென்பாய்
பாழும் பணத்தைத் தேடி படும்பாடு கணக்கில்லை
பகவானை எண்ணமட்டும் அவகாசம் உனக்கில்லை (ஒரு)



# — நாமக்கல் — இராமலிங்கம்பிள்ளை

(ஆசிரியர்)

ஊராற் பெயர் பெற்றவர்களில் முதலிடம் வகிப்பவர் திருவாதவூரடிகள். அதன் பின்பு பலர் இருந்தாலும் நமது காலத்திலே தாம் பிறந்த ஊர்ப் பெயரைத் தமக்கு ஆக்கிக் கொண்டவர்களில் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை அவர்கள் முக்கியமானவர்கள். நாமக்கல் என்பது, தமிழ் நாட்டில் சேலம் மாவட்டத்தின் தென்கோடித் தாலுக்கா. வடக்கிலும் கிழக்கிலும் கொல்லிமலைத்தொடர் செல்லுகின்றது. தென்மேற்கு எல்லையில் காவிரி ஆறு ஓடுகிறது. மலையின் அடிவாரத்தில் நாமகிரி அம்மன் கோயில் இருக்கிறது. இத்தகைய நாமக்கல் என்ற பெயரைத் தனக்கு ஆக்கிக் கொண்டவர்தான் இராமலிங்கம் பிள்ளை அவர்கள்.

"ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்லாதே!" என்பது பழமொழி. பெரியவர்களின் பெயர்களைச் சொல்லி அழைப்பது பண்பாடு அல்ல. அவர்களது பெயர்களைச் சொல்லி அழைக்க வேண்டிய தவிர்க்க முடியாத சமயங்களில் பெயருக்குப் பதிலாக அவரது ஊரின் பெயரைக் கூறி அழைப்பது வழக்கம்.

தந்தையின் பெயர் வெங்கட்ராம பிள்ளை. தாயார் பெயர் அம்மணியம்மாள். ஏழு பெண் குழந்தைகளின் பின் தாய் தந்தையரின் தவப் பெருமையினால் இராமலிங்கம் எட்டாவது குழந்தையாகப் பிறந்தார். அம்மணியம்மாள் நாவலடிக் கறுப்பண்ண சுவாமிக்கு வேண்டிக் கொண்டதனால் மகனுக்கு "கறுப்பண்ணன்" என்று பெயரிட்டார். பிராமணக் கிழவர் ஒருவர் இராமேசுவரப் பிரசாதம் கொடுத்து ஆசீர்வாதம் செய்து இக்குழந்தை பிறந்தமையினால் தந்தையார் இராமலிங்கம் எனப் பெயரிட்டார்.

அம்மணி அம்மாளுக்கு இராமலிங்கத்தின்மேல் உயிர். குழந்தையை அடிக்கடி கோயிலுக்குக் கூட்டிச் செல்வார். பையனைக் கோயில் முன் நிறுத்தி, ''சாமி! என் குழந்தையைக் காப்பாத்து; அவனுக்கு நல்ல புத்தி கொடு!'' என்று வேண்டுதல் செய்வார். குழந்தையின் கைகளில் சில்லறையைக் கொடுத்து ஏழை எளியவர்களுக்குக் கொடுக்கச் செய்வார். இவர்கள் வீட்டில் இரண்டு பால் மாடுகளுக்கு எப்பொழுதும் குறைவில்லை. அம்மணி அம்மாள் தினந்தோறும் கொஞ்சம் பாலைப் பிரை போடாமல் வைத்துக் குழந்தைகளுக்கென்று வந்து கேட்போருக்கெல்லாம் கொடுப்பாள். திங்கட்கிழமை தோறும் பரதேசிகளுக்கு அன்னம் இடுவார்கள்.

இராமலிங்கம் தாமாகவே விரும்பிக் கற்று திறமையடைந்த ஒரு பாடம் உண்டு என்றால் அது சித்திர பாடமாகும். ஒன்று தொடக்கம் பத்து வரையுள்ள இலக்கங்களைக் கொண்டு ஒரு மனிதனது தலையை அமைத்து அப்படத்தை இங்கிலாந்திலுள்ள ஒரு சித்திரப் போட்டிக்கு அனுப்பி ஏழு கிண்ணி பரிசாகப் பெற்றார். ஓய்வு நேரங்களில் கவியும் எழுதி வந்தார். சித்திரம் வாழ்வுக்கு ஊதியம் கொடுக்கும் தொழிலாகவும் கவி எழுதுதல் ஓய்வுநேர வேலையாகவும் மாறியது.

மகாத்மாகாந்தி அடிகள் சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பித்த உப்புச் சத்தியாக்கிரகத்தின்போது ''கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது!'' என்ற பாடலைப் பாடி மக்களிடையே சுதந்திர உணர்வை ஊட்டினார். அப் பாடலைச் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்ட அத்தனை பேரும் பாடினர்.

நாட்டுப் பற்றையும் தமிழ்ப் பற்றையும் இரு கண்கள் எனக்கொண்டு வளர்த்தார்.

''தமிழன் என்றோர் இனமுண்டு! தனியே
அவர்க்கொரு குணம் உண்டு!''
''தமிழன் என்று சொல்லடா - தலை நிமிர்ந்து நில்லடா!''



என்ற பாடல்களைப் பாடித் தமிழர்களைத் தலைநிமிர்ந்து நடக்க வைத்தார். இவரது பாடல்கள் மக்களிடையே தெய்வ பக்தியையும், தேசாபிமானத்தையும், பாஷாபிமானத்தையும் ஊட்டி வந்தது. இவரது பாடல்களை நன்கு கற்றறிந்த சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்கள், இவரது பாடல்கள் சிற்சில அம்சங்களில் தேசியக் கவிச் சக்கரவர்த்தி ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியாருடைய பாடல்களைக் காட்டிலும் சிறந்து விளங்குகின்றன என்று பாராட்டி உள்ளார்.

சிறுவர்களுக்குத் தெய்வத்தைப் பற்றிக் கூறவந்த கவிஞர்,

''சூரியன் வருவது யாராலே? சந்திரன் திரிவது எவராலே?
காரிருள்வானில் மின்மினிபோல் கண்ணிற்படுவன அவைஎன்ன?
பேரிடி மின்னல் எதனாலே? பெருமழை பெய்வது எவராலே?
ஆரிதற்கெல்லாம் அதிகாரி? அதைநாம் எண்ணிடவேண்டாமோ?''

என்று கூறிச் சிறுவர்களைச் சிந்திக்கத் தூண்டுகின்றார். ஒவ்வொரு சமயத்தவரும் ஆண்டவனை ஒவ்வொரு பெயரிட்டழைக்கின்றனர். பெயர்கள் பலவாயினும் ஆண்டவன் ஒருவனேதான் என்று ஆணித்தரமாய்க் கூறுகின்றார்.

''பலபல தெய்வமாகிப் பற்பல மதங்களாகிப்
பக்குவப்படியே தோன்றும் பரமனார் பெருமை போற்றி!'',
என்று கூறுகின்றார்.

''விசையுறு பந்தினைப்போல் — உள்ளம்
வேண்டிய படிசெலும் உடல் கேட்டேன்''
என்பது பாரதியார் வாக்கு.

கவிஞர் அவர்கள்,
''கல்லினுங் கட்டுடைத் தேகம் எனக்கருள்வாய்
காலனை ஜயித்திடும் கருணையும் தருவாய்''
என்று வேண்டுகின்றார்கள்.

மகாத்மா காந்தியவர்கள் ''தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்குத் தனித் தொகுதி கொடுத்து அவர்களை ஹிந்து சமூகத்திலிருந்து பிரித்து வைத்ததை ரத்து செய்தால் அல்லாமல் உண்ணுவிரதமிருந்து உயிர் விடுவேன்'' என்று, ஆங்கிலேயப் பிரதம மந்திரி ராம்சே மக்டனுல்டுக்கும், இந்தியா மந்திரி சாமுவேல் ஹோருக்கும் எழுதியிருந்த கடிதங்களைப் பற்றிக் கேள்விப்பட்டு மகாத்மா விரதம் ஆரம்பிக்கு முன்னுல் கவிஞர் அவர்கள் பத்துப் பாடல்கள் பாடினுர்கள்.

அதில் மூதல் பாடல் பின்வருமாறு:—

''மனிதர்கள் கடவுளாகார் கடவுளர் மனிதராவார்
புனிதமும் பொறுமை யாவும் பொய்யிலா வாழ்வும் பற்றிக்
கனதையும் கருணை பொங்கும் காந்தி போல்வாரை விட்டு
இனியொரு கடவுளென்பார் எங்குளார்? எங்குளாரே?

மகாத்மாவினிடத்தும் அவரது சத்தியம் அஹிம்சையிடத்தும் கவிஞருக்கு அசைவில்லாத நம்பிக்கையை அவரது பாடல்கள் தோறும் பார்க்கலாம்.

கவிஞர் இளமை தொட்டே ஆயிரக்கணக்கான பாடல்களை எழுதியவர். அவ்வப்போது பலவித பாடல்களை எழுதினுராயினும் அவற்றைச் சேர்த்து வைக்கும் திறமில்லாதவராயினுர். சுதந்திரப் போராட்டத்தில் மும்முரமாக ஈடுபட்டுச் சிறை சென்ற காலத்தில் இளமைக் காலத்தில் எழுதிய பாடல்கள் யாவும் எப்படியோ அவர் கையைவிட்டு மறைந்து விட்டன. அதற்காக அவர் கவலைப்படவில்லை. கர்த்தர் தந்தார்; கர்த்தர் எடுத்துக் கொண்டார் என்று மகிழ்வோடிருந்தார்.

ஒரு சந்தர்ப்பத்தில் இராஜாஜி அவர்கள் கவிஞரைப் புகழ்ந்து, "இந்தச் சமயத்தில் சுப்பிரமணிய பாரதியார் இல்லையே என்று நான் எண்ணினேன். அந்தக் குறையை நீங்கள் நீக்கி விட்டீர்கள்'' என்று பாராட்டியிருந்தார். 1924-ல் சென்னையில் காங்கிரஸ் மகாசபை நடந்த சமயத்தில் வரவேற்புக் கழகத்தின் தலைவராக இருந்த காலஞ்சென்ற ஸ்ரீ எஸ். ஸ்ரீநிவாச ஐயங்கார் அவர்கள் தேசியப்



பாட்டுகளுக்காக ஏற்படுத்திய வித்துவான்கள் போட்டியில் கவிஞருக்கு ஒரு தங்கப் பதக்கம் பரிசு அளிக்கப்பட்டது. அதுமுதல் கவிஞர் ''காங்கிரஸ் புலவன்'' ஆனுர். இவரது பால்ய சிநேகனுன ரங்கநாதம் செட்டியார், வருஷத்திற்கு இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாய் குத்தகை வந்து கொண்டிருந்த ஒரு சொத்தினைக் கவிஞருடைய குடும்பத்தினருக்குத் தருமசாசனம் செய்து வைத்தார்.

இந்தியா சுதந்திரம் பெற்றபின் முதன்முதல் தமிழ் நாட்டின் ஆஸ்தான கவிஞராகும்பேறு இராமலிங்கம்பிள்ளை அவர்களுக்கே கிடைத்தது. ஒரு கவிஞரை இன்னொரு கவிஞர் பாராட்டுவதென்பது நீண்ட காலமாக வழக்கத்தில் இல்லாதிருந்து வந்தது. இறந்தகாலக் கவிஞர்களைப் பாராட்டினுலும் பாராட்டுவார்கள். ஆனுல் சமகாலக் கவிஞனைப் பாராட்டுவது குறைவாகவே காணப்பட்டது. கவிஞரின் காலத்தில் வாழ்ந்த தேசிகவிநாயகம்பிள்ளை அவர்களைப் பாராட்டிய கவியை நோக்கும்போது கவிஞரின் வெள்ளை உள்ளம் தெளிவாகிறது. கவிமணிக்குக் கவிமூலம் ஒரு உருவம் கொடுக்கின்ருர்.

''துரும்பென மெலிந்த தேகம் துலங்கிடும் குளிர்ந்த பார்வை
இரும்பினும் வலிய உள்ளம் இனியவே செய்யும் எண்ணம்
அரம்பொருள் நினைவே காட்டும் பாரெலாம் பரந்த நோக்கம்
கரும்பினும் இனிய சொற்கள் கவிமணி வடிவமாகும்''

கவிஞரின் நீண்டகாலக் கனவு தமது ஊரில் ஒரு சித்திரப் பள்ளி தொடங்கித் தனது சித்திரக் கலையைப் பல இளைஞர்களுக்குப் புகட்ட வேண்டும் என்பதாகும். அக்கனவை நிறைவேற்றுவதற்கு கனவிலே வந்து வழி கூறியவர் இலங்கைக் குயீன்ஸ்பரித் தோட்டத்தில் சமாதி அடைந்த நவநாதசித்த சுவாமிகளாகும். அக்கைங்கரியம் நிறைவேற உறுதுணையாக இருந்தவர்கள் நவநாதசித்த சுவாமி இலங்கைக்கு வரக் காலாயிருந்த குயீன்ஸ்பரிக் கங்காணியார் குடும்பத்தினராவர். இக்குடும்பத்தினரின் அழைப்பின்பேரில் கவிஞர் ஈழம் வந்தபோது ஈழத்தின் பல பாகங்களிலும் பல பாராட்டுதல்களையும் பொன் முடிப்புக்களையும் பெற்றுச் சென்ருர். கவிஞரின் மறைவு தமிழகத்திற்கு ஒரு பேரிழப்பு ஆகும்.

# ஆத்ம சாதனம்

## (திருமதி. கே. ஜெகதாம்பாள்)

உணவு ஊட்டி உடலை வளர்க்கின்றோம். அப்படி உடலைப் பேணுவது உயிர்கள் அனைத்துக்கும் பொதுவானது. பின்பு உள்ளத்தைப் பேணுவது மனிதனுடைய தனிச் செயல் ஆகிறது. ஐந்தறிவு படைத்தவை மிருகங்கள். ஆறு அறிவு படைத்தவர்கள் மனிதர்கள். இதனை தன் மனமூலம்தானே அறிந்து ஆறுவது அறிவான இறைவணக்கத்தை தினசரி தியானம் செய்வதன் மூலம் விருத்தி செய்யலாம். அப்படி தினசரி காலை மாலை தியானம் செய்வதன் மூலம் ஒரு மனிதன் தெய்வமாகிறான். பின்பு உயிர்களுக்கெல்லாம் தொண்டு செய்து தனக்கென ஒரு வழி வகுத்து நடப்பது மனிதனின் தினசரி இறை தொண்டாகிறது. மக்கள் சேவையும் ஒரு இறை சேவையே. அடுத்து நல்ல நல்ல சிந்தனைகள் நம் உள்ள வளர்ச்சிக்கு சத்துணவு போன்றது. நமது உடம்பில் நோய்வராது வாழவேண்டுமானால் நாம் நல்ல நல்ல சத்துணவுகளை உண்ண வேண்டும். நல்ல நல்ல பழக்க வழக்கங்களைக் கையாளவேண்டும். அது போலவே தூய்மையும் தூய நினைவுகளுமே மனிதனின் ஆத்ம சாதனம்.

நற் சிந்தனைகளை நாம் தினசரி சிந்திக்க சில சமயப் புத்தகங்களையும் தேவாரங்களையும் படிக்கவேண்டும். தினம் திருவாசகம் படிப்பதன் மூலம் இறை தரிசனம் பெறலாம் என்பது சிவனடியார்களது நம்பிக்கை. உண்மையுங்கூட. உதாரணமாக (இதோ சில நற்சிந்தனைகளை தினசரி தியானம் செய்யத் தகுந்தவைகளை உங்களுக்கு முன் ஆத்ம சாதனம் மூலம் வெளிப்படுத்துகிறார் சுவாமி சித்பவானந்தர் அவர்கள், அவற்றில் சில.)



அன்பு:— அன்புக் களஞ்சியமே! என்னை நீ அன்பில் தோய்த்து அன்புமயம் ஆக்கிவிடாயோ? அன்பில்லாது நான் எங்ஙனம் உயிர் வாழ்வேன்! உன்னிடத்திருந்தல்லாது அன்பை நாடி நான் எங்கு செல்வேன்?

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே. —திருமந்திரம்

தொண்டு:— உயிர்க்கெல்லாம் அன்புடன் தொண்டு புரியும் ஆர்வத்தை அண்ணலே எனக்கு நீ நல்குவாயாக.

உண்டு உடுத்துப்பூண்டு இங்கு உலகத்தார் போல்திரியும்
தொண்டர் விளையாட்டே சுகங்காண் பராபரமே.
—தாயுமானவர்

ஒழுக்கம்:— இறைவா, நின்னை நான் நினைத்திருக்கும் வேளையில் நிழல் போன்று ஒழுக்கம் என்னைப் பின் தொடர்கிறது. நின்னை மறந்திருக்கும் வேளையில் ஒழுக்கத்தின் நிழல் போன்று அதை நான் பின்பற்றுகிறேன்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்" —திருக்குறள்

மரணம்:— நாள் தோறும் மக்கள் மடிந்துபோவதைப் பார்த்திருந்தும், நான் மட்டும் அதற்கு விலக்காவேன் என்றெண்ணும் மடமை என் மனதிலும் புகுந்துவிட்டது. எம்பெருமானே அம் மடமையை நீ அகற்றிவிடுவாயாகுக.

நல்வழி:— நான் நல்வழியில் நடந்தால் இறைவா, உன்னையன்றி வேறு எங்கே போக முடியும்.

"நல்லாற்றல் நாடி அருளாள்க பல்லாற்றல்
தேரினும் அஃதே துணை" —திருக்குறள்

இன்பம்:— யான்பெற்ற இன்பம் இவ்வையமும் பெறுக.

அருள் தாகம்: அற்ப பொருளுக்காக தாகம் கொண்டுள்ள என் மனதில் அருள் தாகம் எடுக்கும்படியாக அண்ணலே நீ அருள்புரிவாயாக.

பேரின்பமாகிய இறைவனை வணங்குவோர் ஜீவபோதம் என்னும் சிறு வீட்டை வெறுப்பர். இதனை ஒவ்வொரு மனிதனும் அறிந்து வாழவேண்டும். இதுவே இறைவனின் விருப்பம்.

தன்கடன் அடியேனையும் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே. —அப்பர்

செய்கருமத் தேயன்றிச் சேரும்பயன் தன்னில்
ஐய வுனக் கில்லை அதிகாரம். -பகவத்கீதை வெண்பா

---

## ஈழத்துச் சிதம்பர புராணம்

நூல் ஆசிரியர்:- புலவர்மணி சோ. இளமுருகனார்.
உரை ஆசிரியர்:- பண்டிதைமணி இ. பரமேசுவரியார்.
விலை:- ரூபா இருபது.

கிடைக்குமிடம்:-

**பண்டிதர் சிவத்திரு. க. வைத்தீசுவரக் குருக்கள்,**
ஈழத்துச் சிதம்பரத் தேவத்தானம்,
காரைநகர் — இலங்கை.

கவியா அன்றி உரையா சிறந்தது என்று கேட்கும் அளவிற்கு கவியும் உரையும் ஒன்றை யொன்று விஞ்சி வாசகர்களை எங்கோ ஒரு புதிய உலகத்திற்கு இழுத்துச் செல்லுகின்றது இந்நூல். ஒவ்வொரு சைவர்களுடைய இல்லத்திலும் இருக்கவேண்டிய அருமையான நூல். நூலைப் படிக்கும்போது தலபுராணம் ஒன்றைப் படிக்கிறோமே என்ற எண்ணமே எழாதவாறு அப்பரும் சம்பந்தரும் சுந்தரரும் அருள்மணிவாசகரும் இடையிடையே தோன்றி தெய்வீகமணத்தைக் கமழச் செய்கின்றனர். பல நூல்களைக்கற்று அறியவேண்டிய பெருண்மைகளை இப்புராணம் ஒன்றையே படித்தல் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது. ஈழத்துச் சிதம்பர புராணத்தைப் படிக்கும்போது ஈழத்துச் சிதம்பரேஸ்வரரைத் தரிசிப்பதோடு தில்லைச் சிதம்பர நடராஜப் பெருமானையும் தரிசிக்க முடிகிறது. இது இந்நூலுக்கே உள்ள ஒரு தனிச்சிறப்பாகும்.



# அருளுடல் அல்லது நித்தியசரீரம்-2

## கங்காதரன் ஸ்ரீ அரவிந்தாசிரமம் - புதுவை

(சென்ற இதழ்த் தொடர்ச்சி...........)

அறியாமையினின்றும் அகந்தைத் தனி உணர்வினின்றும், ஆசை சினம் பயம் முதலிய கீழியல் குணங்களினின்றும் விடுபட்டுத் தூய்மையும் அமைதியும் அடையும் போது நமது ஜீவாத்மா எப்படி இறை நிலை எய்துகின்றதோ அது போலவே தாமச ராஜச சாத்வீக குணங்களினின்றும் விடுபட்டு சத்திய சேதனத்தின் இறக்கத்தால் தெய்வீக ரூபாந்திரமும் திவ்ய பரிபூர்ணமும் அடையும் போது நமது ஜீவாத்மாவைப் போலவே மனப் பிராண சூட்சும தேகங்களும் அழியாத அமரநிலையை அடைகின்றன.

மனிதனை அம்ருத புத்திரன் என்று வேதங்கள் அருளுகின்றன. ஆத்மாவும் உடலும் சேர்ந்த முழு வடிவே மனிதனாவான், உடலற்ற ஆத்மாவும் ஆத்மா அற்ற உடலும் முழு மனிதனாக முடியாது. உடலற்ற ஆத்மாவை மட்டும் அம்ருதபுத்திரன் என்று குறிப்பிடவில்லை. அம்ருதபுத்திரன் என்பது தூய்மையும் தெய்வத்தன்மையுமுற்ற உடலுடன் கூடிய ஆத்மாவையே யாகும்.

நிரந்தரம் பசி பிணி மூப்பு சாக்காட்டி கட்டுண்டுழன்று துயருறும் இத்தூல சரீரம் எப்படி பூரண உணர்வுடனும் பரிபூர்ணானந்தத்துடனுங் கூடிய நித்திய சரீரமாக மாற முடியும் என்ற ஐயம் நம்மில் பெரும்பாலோருக்கு எழக் கூடும்.

நாம் என்பது எப்படி அஞ்ஞான நிலையிலுள்ள மனப் பிராண தேகங்களன்றி, இவைகளுக்குப் பின்னே உள்ளாழ்ந்த மோனத்தில் சேதன சொரூபமாக இலங்கும் ஆத்மாவோ

அதுபோலவே நித்திய சரீர மென்பது அழிவும் மாறுதலுமுடைய இத்தூல சரீரமும் பிறவிதோறும் ஜீவன் எடுக்கக்கூடிய தோற்றங்களுக்குத் தகுந்தாற்போல அழிந்து புதிது புதிதாக எடுக்கக்கூடிய பரிபக்குவமும் பூரணத்துவமும் அடையாத மனப் பிராண சூட்சும தேகங்களோ அன்று;

பேரொளியின் இறக்கத்தால் சத்திய சேதன மென்று மறைகள் போற்றும் அதியாசை உணர்வின் ஸ்பரிசத்தால் தெய்வீக ரூபாந்திரமும் திவ்ய பரிபூர்ணமும் அடைந்து பொன்மயமான திவ்ய தேஜஸுடனும் தெய்வீகப் பேரெழிலுடனும் அருளொளியுடனும் திகழ்ந்து அழிவின்றி நிரந்தரம் அந்தராத்மாவுடன் இருக்கக்கூடிய பூரணத்துவமுற்ற மனப் பிராணன்களுடன் கூடிய சூட்சும சரீரமே நித்திய சரீரமாகும்.

நாம் பூரண யோக மார்க்கத்தில் சென்று சாதனை செய்து அனுபவ வாயிலாக உணராமையினாலேயே நித்திய சரீரம் இல்லாததாகிவிடாது. ஆர்வம் பரிபூர்ண ஆத்ம சமர்ப்பண சங்கற்பத் தடைகளைக் கண்டஞ்சா நெஞ்சுரம், இறைவனுடைய என்றும் வற்றாப் பெருங்கருணையில் அசைக்க முடியாத நம்பிக்கை, சத்குருவின் அருட்காப்புமுடைய அதிதீவிர ஆத்ம சாதகர்கள் அனைவரும் இந்த நித்திய சரீரத்தைப் பெறமுடியும்.

தற்கால உலகில் பெரும்பாலான மக்கள் புலன்வழி சென்று விஷய போகங்களுக்கு அடிமையாகி காண்பதே உண்மை அதற்கப்பால் வேறொன்றுமில்லை என்ற லோகாயத மனப்பான்மை உடையவர்களாக இருக்கின்றனர். ஆத்மாவையே ஒப்பாத நிரீஸ்வர வாதிகளாகிய இவர்கள் எப்படி நித்திய சரீரத்தை ஒப்புக்கொள்ளப் போகிறார்கள். தற்கால உலகில் சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தில் உள்ளவர்களும் பெரும்பாலான மக்களும் உணராமையினாலும் ஒப்புக்கொள்ளாமையினாலுமே உண்மை பொய்யாகிவிடாது, ஒப்புக்கொள்ளும் மக்களுடைய எண்ணிக்கையைப் பொறுத்ததன்று உண்மையின் சிறப்பு;



அதை ஏற்போருடைய சுயசிந்தனையையும் சுய சாதனையையும் சுயானுபவத்தையும் சுயானுபூதியையுமே பொறுத்ததாகும்.

பிறவிக் குருடனொருவன் அருணோதயத்தின் அற்புதக் காட்சிகளைக் கண்டு பரவசமடைய முடியாமையினாலேயே அருணோதயம் இல்லாததாகிவிடாது.

ஜீவயாத்திரையின் முடிவில் நமது ஆத்மா பரமாத்மாவுடனும் நமது மனப் பிராண சூட்சும தேகங்கள் இயற்கை அன்னையாகிய விசுவப்பிருகிருதியுடன் கலந்தொன்றி மறைந்து விடுவது உண்மையாயின், நாம் சத்குருவை சரண் புகுந்து ஆத்மீக மார்க்கங்களில் சென்று சாதனை செய்யவேண்டிய அவசியம் இல்லை அல்லவா? மரணத்தின் மூலம் நாம் இயல்பாக அடையும் ஒரு நிலையை அடைவதற்கு ஏன் வீணாக கடுந்தபசும் சாதனையும் செய்ய வேண்டும்.

ஐக்கியானுபூதி என்பது நாம் பிரம்ம சேதனத்துடன் ஒன்றுபடுவது மட்டுமன்று,

ஆனந்த மோன அகண்ட பரிபூரண அருளமுத ஒளிக்கடலாம் பரம்பொருளினின்றும் தோன்றி அதனில் நிரந்தரம் இயங்கும் அருளலைத் திரள்களே நாம் என்று உணர்வதுங்கூட ஐக்யானு பூதியேயாகும்.

இத்தகைய உயரிய ஆத்மானுபவங்களைப் பெற்று அருட்காட்சிகளைக்கண்டு அருளொலிகளைக் கேட்கும் போது நம் ஆத்மா எப்படி நித்தியத்துவம் அடைகின்றதோ அதுபோலவே அவ்வாத்மாவதியும் திருக்கோயிலாகிய திரு வுடலும் அது ஏற்றுள்ள பரிபக்குவமும் பூர்ணத்துவமும் அடைந்துள்ள மனப் பிராண சூட்சும தேகங்களும் அழியாத அமரத்துவத்தையும் என்றுமுள்ள நித்தியத்துவத்தையும் அடைகின்றன.

இந்த உன்னத நிலையையே த்வைத விசிஷ்டாத்வைத சைவ சாக்த தத்துவ தரிசன போதகர்கள் இம்மார்க்கங்களைப் பின்பற்றுவோர் முடிவில் சாஸ்வத இளமையுடன் கூடிய நித்திய சரீரத்துடன் ஆதியும் அந்தமும் அற்றதும் அநாதியுமான பரம்பொருளில் வசிக்கும் நிலையை அடைகின்றனர் என்று அருளியுள்ளனர்.

சிவலோக பதவி வைகுண்ட பதவி கூடுடன் கைலாசம் போகுதல் இறந்தபின் இறைவனில் வசித்தல் சாலோக சாமீப சாரூப பதவிகள் என்று சமய போதகர்களும் தத்துவ தரிசனர்களும் குறிப்பிடும் நிலைகளும் மரணமிலாப் பெருவாழ்வு என்று மறையார்த்த மாமுனிவர்கள் போற்றிப் புகழ்ந்ததும் பரிபக்குவ மடைந்த நித்திய சரீரத்துடன் பரிசுத்த ஆத்மாவதியும் அருளுடலையும் அதுவதியும் அருளுணர்வு நிலைகளையுமேயாகும்.

இந்து தத்துவ தரிசன போதங்களாகிய வேதம் உபநிடதம் போன்று வேத தத்துவ தரிசனங்களின் உட்பிரிவுகளாகிய சைவம் வைணவம் சாக்தம் முதலிய தத்துவ தரிசன போதங்களும் பிராதனமும் சனாதனமும் அநாதியும் ஆனவைகளாகும். இவைகள் வாழ்வை வெறுக்கவில்லை, கானல் நீர் நீரிற்குமிழி பொய்மாயக் கனவு என்று துறக்கவில்லை ஊன்வாட உயிர்வாடக் கடுந்தவம் புரியவில்லை; ஜகத் மித்யை பிரம்மமே சத்தியம் என்று போதிக்கவில்லை. பரிசுத்த தவவாழ்வின் மூலம் வாழ்வாங்கு வாழ்ந்து பரம்பொருளையுணர்ந்து இவ்வுலகில் இப்பிறவியிலேயே பேரின்பக் களிப்பில் திளைக்கலாம் என்றே அருளியுள்ளன.

இடைக்காலத்தில் தோன்றிய பௌத்த சமண அத்வைத தத்துவ தரிசன போதகர்களின் போதங்களின் ஊடுருவலினாலேயே பிற்காலத்தில் இவைகளில் துறவும் வாழ்வை வெறுத்தழிக்கும் மனப்பான்மையும் இடம்பெறலாயின.



சைவ சமயக்குரவர்கள் நாயன் மார்கள் சேக்கிழார் பெருமான், சிவானந்த போதமெனும் தெவிட்டாத தெள்ளமுதை ஆர்த்த மாமுனிவர் மெய்கண்டார், மகரிஷி தாயுமானார் அருட்சோதி வள்ளலார், ஆழ்வார்கள் வைணவ தத்துவ தரிசனத்திற்கு புத்தொளி பாய்ச்சி தவஞ் செய்து மாதவத்தால் அவதரித்த பெருந்தகையார் ஸ்ரீ ராமானுஜர் போன்ற தமிழ்த்தாயின் தவப்புதல்வர்கள் வாழ்க்கைக்கு எத்தகைய முக்கியத்துவம் அளித்துள்ளனர் என்பதை அவர்கள் அருளிய அருள் மறைகளிலும் போதங்களிலும் மிகத்தெளிவாகக் காணலாம்.

பசு பதி பாசம் என்ற மூன்று தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு, பரிசுத்த தவ வாழ்வின் மூலம் பாசத்தினின்றும் முற்றும் விடுபட்ட பசுவாகிய ஜீவன் பதியாகிய பரமனை அடைந்து பேரின்பக்களிப்பில் திளைப்பதுவே வாழ்வின் குறிக்கோள் என்பதுவே, மாமறைகளின் சாரங்களை எல்லாம் தன்னகத்தே கொண்டதும் மாமுனிவர் மெய்கண்டார் அருளியதும், என்றும் மங்காத மெய்ஞ்ஞான ஒளிச் சுடராய்த் திகழும் அருள் மறையுமாகிய மெய்ஞ்ஞான போதமாகும்.

இன்று உலகெங்கிலுமுள்ள தலைசிறந்த தத்துவ தரிசன போதகர்களால் சிறந்ததாகக் கருதப்படும் நடை முறையிலுள்ள வேதாந்த தத்துவ போதமானது,

பௌத்த சமண அத்வைத தத்துவ போதங்களின் கலவையாகக் காணப்படுகிறதேயன்றி,

அநாதியானதும் சநாதனமானதும் வாழ்க்கைக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதுமான இந்து தத்துவ தரிசனங்களின் விளக்கமாகிய வேதங்களின் போதமாகக் காணப்படவில்லை.

(தொடரும்)

# இறை வழிபாட்டின் அவசியம் பற்றி

## ஸ்ரீ பக்தவத்சலம்

சென்னை "அடியார் திருக்கூட்ட இறைபணி மன்ற"த்தின் தாம்பரம் கிளை சபையின் சார்பில் (8-வது ஆண்டு விழா) "ஸ்ரீ அருணகிரிநாதர் பெருவிழா" சாது ஸ்ரீ பித்துக்குளி முருகதாஸ் தலைமையில் தாம்பரம் வேளச்சேரி ரோடு நவீன் ஸ்டூடியோ சமீபம் உள்ள நவீன் இல்லத்தில் விமரிசையாக நடைபெற்றது.

(தாம்பரம் கிளை) மன்றத்தின் மாணவ மாணவியர்களின் திருப்புகழ் பஜனை இன்னிசை நிகழ்ச்சியுடன் விழா துவங்கியது.

"சென்னை அடியார் திருக்கூட்ட இறைபணிமன்றம்" தலைமை நிலைய அன்பர்கள் டாக்டர். பி. எஸ். சி. மணியின் தலைமையில் நிகழ்த்திய தெய்வீக உணர்ச்சி நிறை திருப்புகழ் பஜனை இன்னிசையும், "அமிர்தவசனி" ஆசிரியரும், அடியார் திருக்கூட்ட இறைபணி மன்ற ஸ்தாபகரும் ஆகிய பிரம்மஸ்ரீ எஸ். முத்துசாமி அய்யர் "வாக்குக்கு அருணகிரி வாழ்க்கைக்கு திருப்புகழ்" என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவும் "ஸ்ரீரங்கம்-கானபாஸ்கர" "இசைச் சுடர்" டி. ஆர். கண்ணனின் திருப்புகழ் இன்னிசையும் "பாலபாரதி', - "கலைச்செல்வி" குமாரி உமா சரஸ்வதியின் தேவாரப் பண்ணிசையும் கோவிலூர் எம். பாலகிருஷ்ண முதலியாரின் ஆன்மீகக் கருத்து நிறை சொற்பொழிவும் தண்டையார் பேட்டை "நாமாவளி புகழ்" ஆர். பாலுவின் (பாலசுப்பிரமணியம்) நாமாவளி விருந்தும் விகடகேசரி பாலு சகோதரர்களின் விகட கலா நிகழ்ச்சியும் நடைபெற்றன.



விழா நிகழ்ச்சிகளிடையே தமிழக முன்னாள் முதல்வர் "திரு. எம். பக்தவத்சலம் விஜயம் செய்து சிறப்புச் சொற்பொழிவாற்றினார். இந்திய மக்களின் ஆன்மீக கலாசார இறையுணர்ச்சி நன்னெறிமுறை ஆன்மநேய ஒருமைப்பாடுபற்றி அவர் விளக்கினார்." "பணமும் பதவியும் சுகபோக டாம்பீக வாழ்க்கைமட்டும் மனிதனை உயர்த்தி மன நிம்மதியான சாந்தி நிலையை தந்துவிடாது. இறையுணர்ச்சி பெருகவேண்டும், நன்னெறியும் மனத் தூய்மையையும் அடைய வேண்டுமானால் பக்தி உணர்ச்சியும் இறைவழிபாடும் அவசியம். நாகரிக வளர்ச்சியில் முன்னேற்றமடைந்துள்ள மேல்நாட்டவர்கள்கூட நம் இந்திய மக்களின் ஆன்மீக - ஆன்மநேய ஒருமைப்பாட்டின் கொள்கைகளையும் நமது கலாச்சார தத்துவங்களின் உயர்வையும் போற்றி இப்போது நம்மை மதிக்கிறார்கள். இதுபோன்ற தெய்வீகப் பணி புரியும் மன்றங்கள் எங்கும் தோற்றுவித்து இறை வழிபாட்டின் புராதனப் பெருமை வாய்ந்த பக்திமார்க்க நெறிமுறைகளின் கருத்துக்களை மக்களிடையே பரப்பவேண்டும். அதற்காக நாம் அனைவரும் கட்சி, இன, மத வேற்றுமைகளைக் களைந்து ஒன்றுபட்டு பாடுபடவேண்டும்!" என்று ஸ்ரீ பக்தவத்சலம் கூறினார்.

விழா நிகழ்ச்சிகளின் சிகரம் போன்று அமைந்தது சாது ஸ்ரீ பித்துக்குளி முருகதாஸின் "முருகநாமகான பஜனாம்ருதம்" நிகழ்ச்சி.

கிளை மன்றத் தலைவர் திரு. டி. ஏகாம்பரம் நன்றியுரை கூறினார்.

---

உணர்ச்சி வெறி, கோபம், பற்று, பேராசை இவற்றையெல்லாம் துறந்து, ஆத்மனைப்பற்றிச் சிந்தனை செலுத்தி உன் உண்மையான தன்மையைக் கண்டுபிடிக்க முயல். ஆத்மஞானம் இல்லாத மூடர் பயங்கர நரகங்களையே அடைவர்.

—சங்கரர்.

# ஸூபியாக்கள் காட்டும் சுகநிலை

(Dr. K. M P. முகம்மது காசிம்)

இன்றைய மனிதன் இன்பத்தை நுகர வேண்டுமென்ற ஆசையின் துடிப்பால் அங்குமிங்கும் ஓடி மன அமைதியின்றி, மட்டரக இச்சைகளிலே புரளுகின்றான். ஆசையைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்ற ஆர்வம் இருக்கும் வரையில் அதிருப்தியும், அல்லல்களும் நிறைந்துகொண்டே இருக்கும். புல நுகர்ச்சியின் மூலம் இன்பத்தை நுகர்ந்து இனிமையாக வாழலாமென்ற நினைப்பு இருக்கும்வரையில் மன அமைதி காண முடியாது. இச்சைகளின் பிடியினிலே இயங்கிடும் இன்றைய மனிதன் ஆத்மீகச் சுதந்திரமின்றி, அகமகிழ்ச்சியின்றி, சுமை நிறைந்த மனிதனாக துக்கத்தில் துயரத்தில் சதா சுழன்றுகொண்டே இருக்கிறான். எந்த வித இலட்சியமுமின்றி கண்டதே காட்சி, கொண்டதே கோலமென சுற்றித் திரியும் இன்றைய மனிதனுக்கு ஸூபியாக்கள் காட்டும் சிறந்த மார்க்கம் ''திக்றே கபீ'' என்ற மௌன தியானமாகும்.

மேலும் ஸூபிதத்துவம் ஆரம்பத்தில் போதிக்கும் ஒரு முக்கியமான ஆத்மீக அப்பியாசம் என்னவெனில் பனாவாகும். பனாவென்பது அடிமனத்திலே ஆழ்ந்துள்ள பற்பல ஆசைகளின் பதிவுகளை தியான மார்க்கத்தினால் அகற்றிவிட்டு அமைதி காண்பதாகும். மேலும் இந்த பனா நிலையில் நன்கு ஸ்திரப்பட்டால்தான் மிக உயர்வான ஆத்மீக அனுபவங்களைப் பெற முடியும். இஸ்லாமிய ஸூபியாக்கள் மஸ்தான்கள், ஆத்ம ஞானிகள் மனிதனின் மனோதத்துவத்தை வெகு நன்கு விளங்கியிருக்கிறார்கள். அவர்களது ஒரே நோக்கம் என்றும் அழியாத, எதனாலும் பாதிக்கப்படாத உண்மைப் பொருள் யாதென அறிந்து உள்ளும் புறமும் அது மயமாக வாழ்வதாகும். அவர்கள் தங்களது அநுபூதியினால் பெறப்பட்ட முடிவான உண்மைப் பொருளை ''தாத்'' என்று அழைக்கிறார்கள்.



மனிதன் வாழ்க்கையில் பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கு அடிமையாகி, மனங்கலங்கி, பலஹீன நிலையில் இருக்கின்றான். இதற்கு முக்கிய காரணம் யாது? உலகில் மனிதன் தோன்றுவதற்கு முன் அரூப நிலையில் இருந்துதான் இப்பூவுலகிற்கு வந்தான். பிறந்தபின் மாதா பிதாவின் மகிழ்ச்சிக் கரங்களில் வளர்ந்து குடும்பமெனும் சூழலிலே பின்னி நாமரூபங்களிலே மனதைப் பதியவைத்து பின் இது என் சொத்து, என் வீடு, என் மனைவி மக்கள் என்று இவ்வாறாகப் பலதரப்பட்ட விஷயங்களில் நாட்டம் செலுத்தித் தன் சொந்த அரூப நிலையை மறந்து, உலக சுகங்களில் பந்தப்பட்டு பலவித ஆசாபாசங்களுக்கு ஆளாகி துக்கம் நிறைந்த, துயரம் கலந்த இவ்வுலக வாழ்விலே சிக்குகிறான்.

ஆனால் உலகமென்பது சதா மாறிக்கொண்டு. மறைந்துகொண்டு நிலையற்று நிமிஷந்தோறும் நிழற்படம் போல் சுழலும் ஒரு தோற்றமாகும். ஆகவே, உலகை வெறுக்காமலும், அதை விரும்பாமலும் யாவற்றையும் சாட்சிமயமாக சுட்டாமல் பார்த்துப் பார்த்துத் துயரற்று வாழப் பழகிக்கொள்ள வேண்டும்மென ஸூபியாக்கள் வற்புறுத்துகிறார்கள். மேலும் ஸூபியாக்களது கொள்கைப்படி ஞானத்தை அடைவதற்கும், முக்தி நிலை பெறுவதற்கும் உலக வாழ்வை விட்டு, கடமைகளைப் புறக்கணித்துக் காட்டுக்குச் செல்ல வேண்டுமென்ற நியதியில்லை. பரிசுத்தம் நிறைந்த கட்டுப்பாடான ஒழுக்கத்தை தினசரி வாழ்க்கையில் அனுஷ்டித்து, எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நேர்மையையே மையமாக வைத்து, எது வந்து நேரிடினும், மாறிடினும், இரண்டையும் சமமாக நோக்கி வாழப் பழகுவதே சுகம்பெறச் சிறந்த மார்க்கமாகும்.

ஸூபியாக்களது ஆத்மீக அநுபூதியின் படித்தரங்களின் படி மனதில் ஆசைகள் அழிந்துவிட்ட நன்னிலையே பனா வாகக் கருதுகிறார்கள். இந்த பனா நிலையைக் கடந்தது பக்காவெனும் உன்னத நிலையாகும். ஏனெனில், இந்த உயர்வான நிலையே நினைவிற்கும் கனவிற்கும் சுழுத்திக் கும் அப்பாலான, நான் எனும் அகந்தையற்ற நிலை. இது வே மனிதனுடைய ஸ்திரமான நிலை. இது தியானத்தின் உச்ச நிலை. காரணம் யாதெனில் மனம் எதிலும் தொடர் பற்று, அசைவற்று சடசம்பந்தமான இச்சைகளின் கொடு மையிலிருந்தும் முற்றிலும் விடுபட்ட, நித்திய நிர்மல பே ரின்ப நிலையாகும்.

மனோதத்துவ ரீதியில் இதை விளக்குவதென்றால் மனிதன் கீழ் நிலையில் உடலை நானென அபிமானித்து மனதின் கட்டுக்கோப்பில் இச்சைகளின் பிடியினிலே வாழ் கிறான். இந்த நிலையில் உண்மையான சுகத்தைப்பெற முடி யாது. ஆகவே, ஸூபியாக்கள் மனங்கடந்த, மகத்தான நிலையில் உண்மைப் பொருளுடன் ஒன்றுபட்டு வாழ்ந்திடும் வழியை வகுத்துள்ளார்கள். அந்தப் பேரின்பம் நிறைந்த நிலையைப் புத்தியின் சாதுரியத்தினால் விளக்கவும் முடி யாது, விவரிக்கவும் இயலாது. ஆனால், நிச்சயமாக மௌ னத் தியானத்தினால் நினைவொன்றும் நினையாமல் நிற்கும் நிலையினால் நேரடியாக அனுபவிக்க முடியுமென்று ஸூபி யாக்கள் திடமாக நமக்கு உறுதியளிக்கிறார்கள்.

---

## காலத்தின் விளையாடல்

இரவுக்குப் பின் பகலும், காலைக்குப்பின் மாலையும், குளிர்காலத்திற்குப் பின் வசந்தமும் மாறி மாறி வருகின் றன. காலம் விளையாடல் புரிகின்றது. ஆயுள் தேய்ந்து கொண்டே வருகின்றது. இப்படியிருந்தும், வீண் ஆசைகள் மட்டும் உன்னைவிட்டுப் போவதில்லையே. —சங்கரர்.



# இயற்கையே சோதிடம்

ச. இ. அப்புத்துரை (J. P.) சோதிடன்-வெள்ளவத்தை

## வானசாஸ்திரம்
## பாடம் 22. செவ்வாய்.

சூரியனிலிருந்து பூமிக்கடுத்த கிரகம் செவ்வாய். இவற் றிற்கு அங்காரகன், அரத்தன், அழல், அழலோன், அரிவன், ஆரல், உதிரன், குகன், குருதி, சேய, செந்தீவண்ணன், நில மகன், பௌமன், மங்களன், வக்ரகிரன் ஆக 15 இன்னமுள.

இச்செவ்வாயை சோதிட ரீதியில் பூமிகாரகன், சகோ தர காரகன், யுத்த காரகன் எனவும் பல நாமங்களுண்டு. மற்றக் கிரகங்களைப் பார்க்கினும், இது சிவந்தரூபத்தினா லறியப்படுவதினால் இப்பெயர்கள் சிறப்புப் பெயர்களாகவுங் கொள்ளப்படும். செவ்வாய்க் கிரகம் யாதாமொரு நட்சத் திரத்திற்குக் கிட்ட வரும்போது அந்த நட்சத்திரம் ஒளி மங்கும். அதாவது தகதகவென ஒளிமயமான நட்சத்திரம் சிவந்து காட்டும். இது செவ்வாய்க் கிரகத்தைச் சூழ்ந்தி ருக்கும் பரமாணுக்களின் (Dencity) கனதியால் உண்டாகி றது. எரிமலை பூகம்பம் அதிகமிருப்பதால்தான் இந்தச் செந் நிறமாகும்.

செவ்வாய்க் கிரகத்தின் நாராசச்சரிவு 28 பாகையா கையால் அங்கு சிறந்த பருவகாலங்களுண்டு. சூரிய வெப் பம் பூமியிலும் பார்க்க மூன்றிலொரு பங்கு குறைவாக இருக்கும்.

சூரியனிலிருந்து இவற்றின் தூரம் 13,93,11,000 மைல். இவற்றின் குறுக்களவு 4363 மைல். 61 நாடி 15

விநாடிக்கொருமுறை சுற்றி ஒரு இராப்பகலை உண்டாக்குவதுடன் மணிக்கு 21,236 மைல் வேகத்தில் சென்று சூரியனை 687 நாட்களிற் சுற்றி வரும். அது அக்கிரகத்துக்கு ஒரு வருஷமாகும்.

பூமிக்கடுத்த கிரகம் பூமிக்குக் கிட்டவாய் வரும்போது 5,00,00,000 மைல் தூரத்திலும் பூமி, செவ்வாய் சூரியனுக்கு 7-ம் ராசியில் வரும்போது கிட்டவாகவும் பூமிக்கேழாம் ராசியில் சூரியனும், சூரியனுக்கேழாம் ராசியில் பூமியும் இருக்குமென்பது முன்பாடங்களில் வாசித்துள்ளோம். ஆகவே சூரியனுடன் செவ்வாய் கூடும் காலம் பூமிக்கும் செவ்வாய்க்குமுள்ள தூரம் 24,00,00,000 மைல்களாகும். பூமிக்குக் கிட்டச் செவ்வாயிருப்பின் சங்கமமென்றும், சூரியனுடன் செவ்வாய் இருப்பின் அசங்கமமென்றும் சொல்வார்கள்.

1972-ம் ஆண்டு யூலை 14-ந் திகதியிலிருந்து அக்டோபர் மாதம் 26-ந் திகதிவரை இச்செவ்வாய் ஆகஸ்ட் வரை நீசமும் அஸ்தமனமும் இருப்பதால் இப்போ இது காலம் பூமியிலிருந்து 24,00,00,000 தூரத்தில் இருப்பதாக வாசகர்கள் நெஞ்சில் வைப்பதோடு இது காலத்தில் பூமிகளைச் சுவீகரித்தல் அரசருக்காகாமை. பாகப் பிரிவினை, சகோதர பிரிவினை, நாட்டுக் கலகங்கள், பூமிப்பிரிவினை, மண்சரிவு, பூகம்பம், பூமிநடுக்கம் அக்கினி ஆயுத யுத்த பயமுமாம்.

பூமிக்குக் கிட்டவாயிருக்கும்போது செவ்வாய் அசங்கமத்திலும் பார்க்க, சங்கம காலத்தில் 25 மடங்கு பெரிதாகத் தெரியும். ஒரு இராசியில் சுமார் 57நாட்கள்வரை இருக்கும். செவ்வாய்க் கிரகத்தைச் சுற்றி இரு சந்திரர்களுண்டு. ஒன்று இடவோட்டாகவும், மற்றது வலவோட்டாகவும் சுற்றுவதாகக் கருத்து வெளியிட்டிருக்கிறுர்கள்.

செவ்வாய் மண்டலத்திற்கும் வியாழ மண்டலத்திற்குமிடையே 62 கிரகங்களுக்குமேல் கூட்டக் கிரகங்களிருக்கிறது. இக்கிரகங்களுக்கெல்லாம் ஓர் தலைவன்போல் செவ்வாய் பூமிக்கு முன்னணியில் நிற்கின்றது. இரு காரணம் பற்றியே பூமிகாரகன் என்ற பேர் செவ்வாய்க்குருவாயிற்று போலும். எங்கள் ஆக்கையில் செவ்வாய் இரத்தமாகப் பிரதிபலிக்கிறது. (கோபத்திற்குமிதுவே காரணமாம்)



## பஞ்சபூதக் கிரகம்

பஞ்சபூதக் கிரகங்களில் செவ்வாய் பிருதிவியாயும், சுக்கிரன், அப்புவாயும், குரு தேயுவாயும் புதன் வாயுவாயும் சனி ஆகாயமாயும்; (ஆகிய பஞ்சபூதங்களாகும்) இதில் சொல்லா நின்ற சந்திரனை அப்புவோடும், சூரியனை தேயுவோடும் சேர்ப்பதோடு ராகு கேதுக்களை ஆகாசக்கிரகமென்றும், அண்டநாயகனின் அடிமுடியென்றுங் கொள்க. (சாயாக்கிரகங்களுமெனலாம்)

## செவ்வாயின் பலன் பகுதி

பிருதிவித் தன்மை வாய்ந்த செவ்வாய்க்கு 4, 7, 8-ம் பார்வைகளுண்டு. இந்தப் பார்வைகளினுல் வரும் பலாபலன்களாவன:—

இச்செவ்வாயின் பார்வையால் பூமியாதிக்கமுண்டாகும். இப்பூமியின் பேரிலேதான் மக்கட்குப் பேராசை வளர்கிறது. செவ்வாய் ஒருவர் சாதகத்தில் 1, 4, 7, 10-ம் இடங்களில் ஒன்றில் இருந்தால் பூமி சேரும் என்பார்கள். அப்படி எல்லோருக்கும் நடப்பதில்லை. இருந்தும், பெரும்படியாகப் பூமி சேரும். இச்செவ்வாயின் பார்வைகளில் வேறு கிரகங்களைப் பார்த்தால் அக்கிரகதெசை புத்தி சித்திரங்களிலும் பூமி சேரும். அரசர் பெருமை, அக்கினி, ஆயுத பயம், பட்டம் பதவி, சகோதர உதவிகள் வரும். பார்க்கப்படும் கிரகாதிபர்களின் தன்மை, ராசியின் தன்மை தெரிந்து பூமியின் விருத்தம் கூற முடியும். உதாரணமாக,

கடக, விருச்சிகா, மீனம், சலராசியில் ராகு இருப்பின் சலம் பிடிக்கும். நீண்ட பூமி சேருமெனலாம். கேது இருக்கச் செவ்வாய் கண்டால் பொதுச்சொத்து பூதர் சொத்து, மலட்டுச் சொத்துச் சேரலாம். சனியிருக்கச் செவ்வாய் பார்க்கில் விறுத்தமில்லாத பூமி, ட, ட, முக்கோண விருத்தமான பூமி சேருமெனலாம். செவ்வாயினால் பார்க்கப்படும் கிரகங்கள், பங்கு நட்சத்திரங்களில் இருந்தால், பங்குக் காணி பூமி சேரும், வாதுவழக்குமுண்டாகும்.

## மேட, சிங்க, தனுசு, அக்கினி ராசி

ஆகுவே, சூட்டுப் பிரதேசம் மலைப்பிரதேசங்கள் சேருமெனலாம்.

## பங்கு நட்சத்திரங்களாவன

கார்த்திகை, உத்தரம், உத்தராடம் இவை தலையற்ற நட்சத்திரங்களாகும். மிருக சீரிடம், சித்திரை, அவிட்டம் இவை உடலற்ற நட்சத்திரங்களாகும். புநர்பூசம், விசாகம், பூரட்டாதி. இவை காலற்ற நட்சத்திரங்களாகும். இந்த ஒன்பது நட்சத்திரங்களாலே இராசிகளின் தொடர்பும் இருதேசக் கூட்டுறவுகளும் பலரையும் ஒன்றுசேர்க்கும் தன்மைகள் இந்த நட்சத்திரத்தில் பிறந்தோரால் முடிகிறது. இருந்தும் இவர்கள் இரு இடங்களிலும் குறை குற்றம் கேட்டாலும் பின்சந்ததியினருக்கு ஆக்கபூர்வமான வேலைகளை ஆரம்பஞ்செய்து கொண்டேயிருப்பார்கள்.

இச்செவ்வாய் லக்னத்தில் இருப்போருக்கு மனதில் மற்றவர்களை மதியாது தன்னுடைய ஆணைக்குள் மற்றையோரை அடக்கியாள முற்படுவார்கள். இத்துடன் சூரியன் சனி ராகு கேதுக்கள் லக்னத்தில் இருக்கச் செவ்வாய் பார்த்தாலும் மேற்கூறிய குணங்களைச் செய்ய முற்படுவதோடு பெரும் தலைவர்களாகவும், அதிகாரிகளாகவும், முதலாளிகளாகவும் மற்றவர்கள் சொத்துக்கு மேற்காப்பாள



ராகவும் சேனாதிபதி மந்திரி, ஏன்? அரசர்களாகவும் வருவார்கள். பூமியும் பொன்னும் சேர, மாயையாகிய பெண்ணும் இவர்களுடன் சேர்ந்து ஆதிக்கத்தை அதிகரிக்கவே செய்யும். இதனால் பக்க பெலமான அடிமைகள், குடிமைகள் பலபல சேரும். தயவும் இன்சொல்லும் இவர்களிடமிருக்காது (சிம்பதி) அனுதாபமே வராது (இது கன்மரோகத்திற்கு வித்து) என்பதை இவையறியார்கள் போலும். இருந்தும் இவர்களிடம் உதவிகோரிப் போகிறவர்களிடம் குற்றேவல்களைச் சொல்லி வேலைகளை வேண்டுவார்களே அல்லாது அவர்களுக்குப் பிரதிபலனைக் கொடுக்க மாட்டார்கள். உதவியைக் கொடுத்தால் தங்களின் அன்றாட வேலைகள் செய்ய ஆட்கள் இல்லாமல் போய் விடுவார்களே என்று உதவியைசெய்யாது காலங்களைக்கடத்திக் கொண்டே போவார்கள். இதைவிட சில ஏழைகளையோ, உறவினரில் தொழில் இல்லாதவர்களையோ, வேலை தேடித் தருவதாகச் சொல்லித் தங்களின் வீட்டு வேலைக்கு நம்பிக்கையான ஆளாக்கி அவர்கட்கு ஆன சாப்பாடோ உடுப்போ குளிப்பு முழுக்கோ நித்திரை கொள்ளவிடாது வேலையை வேண்டுவதோடு, வேளாவேளைக்கு அவர்கட்கு விவாகமுமில்லாது சாப்பாடு குறைவதினால் அவர்கள் வேலைக்கே கிழடு வத்த வைத்துக்கொண்டும் ஏசிப்பேசிக் கொண்டும், இது களைப்போ என்று எத்தனையோ தடவை சொல்லியும் போகிறார்களில்லையே என்றுந் திட்டியபடியேயிருப்பார்கள். பிதாமாதா எப்படிப் பேசிப்பேசித் திட்டுகிறார்களோ, அதையே பிள்ளைகளும் சொல்லி ஏசுவார்கள்.

ஆகாதெனினும் அகத்து நெய் உண்டானால்
போகாதெறும்பு புறம் சுற்றும் (யாதுங்)
கொடாராயினும் உடையாரைப் பற்றி
விடார் உலகத்தவர்.

இந்தவிதமாக ஏழைகளை வருத்தினாலும், வேகிற நண்டு தணலைக் கவ்வுமாப்போல், ஒன்றுங் கொடாவிட்

டாலும் பொருள் உடையவர்களைப் பின்தொடர்ந்தபடியே ஏழைகள் இருப்பார்கள்.

பெண், பொன், மண்ணின் பேராசையால் மற்றையோரைச் சுரண்டி வாழுபவர்களின் சுயநலத்தாலேயே இவர்கட்குக் கன்ம ரோகமாகிய கசம், தொய்வு, கண்குருடு கன்சர் (குடல்விற்பறுதி) பைத்தியம், நீரழிவு, வாதம், புண் புரை வியாதி (குட்டை) உடலறுப்புண்ணுதல் மூலம் பவுந்திரம் முதலிய நோய்களால் வருந்தி அந்தப்புறத்திலோ, ஆசுபத்திரியிலோ அன்னிய அடிமைகளால் ஏச்சுப் பேச்சுக் கேட்டு அறிவை விடுவார்கள். இந்தச் செவ்வாய் சனி, ராகு, கேதுக்கள் லக்னத்தில் இருக்கக் குரு சுக்கிரன் புதன் வளர்பிறைச் சந்திரன் கண்டால் ஆளுகையோடு அவர்கள் செய்யும் ஒவ்வொரு கன்மத்திலும் பக்தியாகிய விகர்மத்தைக் கூட்டி சுதர்மத்தை வளரவிட்டு இறுதியில் அகர்மமாகிய முத்தியின்பத்தை அடைவார்கள்!

★★


## ஸ்ரீகாயத்ரீதேவி அருள்பெறவேண்டுமா?

சகல பாபங்களையும் போக்கி, புண்ணியம் கொடுத்து, சம்பத்து களையளித்து, மோக்ஷ சுகத்தையும் அளிக்கவல்ல, ஸ்ரீ காயத்ரீ தேவியை வழிபட்டு, எளியமுறையில் அரிய நன்மைகளை அனுபவமாகப் பெற்று, அருள்வாழ்வு வாழ, அருந்தவ யோகியால் எழுதப்பட்ட புஸ்தகங்கள்:-

1. காயத்ரீ உபாசனா பத்ததி (பூஜா, ஹோம விதியுடன்)
2. காயத்ரீ சகஸ்ரநாம ஸ்தோத்ரம் (தமிழ் உரையுடன்)
3. ஸ்ரீ காயத்ரீ தேவியின் மூவர்ணப்படம்

காணிக்கை ரூபா 5-00

புஸ்தகங்கள், படம், தேவையானோர்க்கு காயத்ரீ யாக பூஜையில் வைத்து, ஸ்ரீ காயத்ரீ உபாசனா சித்திபெற்ற ஒருவரால், சக்தியேற்றி, பிரசாதத்துடன் அனுப்பப்படும்.

— கிடைக்குமிடம் —

ஆத்ம யோக ஞான சபா,
21, கூப்பர்ஸ் ஹில்,
கொழும்பு — 3.




# இறைவனைத் தொழுதால் எவ்வினையும் நீங்கும்.

(மாத்தளை - அருணேசர்)

இறைவனைப் பக்தியுடன் மனமுருகத் தொழுது, நாம் தெரியாத்தனமாய்ச் செய்த தீவினைகளை மன்னித்தருளுமாறு வருந்திவேண்டிக்கொண்டால் அவ்வினைகள் நம்மைவிட்டகல அவர் அருள்புரிவார்.

இது நம் முனிவர்களும் ஞானிகளும் அநுபவத்தில் கண்டறிந்த உண்மை. பக்தி செய்வதைவிட்டு, சிலர் மனம் போனவாறு தீயவழிகளில் நடந்து பாபத்தைத்தேடிக்கொள்கிறார்கள். பிறகு அப்பாபத்தின் பலன் தம்மை வருத்தும்போது ஆண்டவன் தங்களைத் துன்பப்பட வைக்கிறார் என்று அவர்மேல் குறைகூறுகிறார்கள்.

''கடவுள் பாரபட்சமுடையவர்; அதனால்தான் இப்படிச் சகல பிராணிகளுக்கும் சுகதுக்கங்களையும், நன்மை தீமைகளையும் உண்டாக்குகின்றார். ஒருவன் செல்வந்தனாகவும், ஒருவன்பிச்சைக்காரனாகவும், ஒருவன்அழகுடையவனாகவும், இன்னொருவன் அவலட்சணமுடையவனாகவும் பிறந்திருப்பதற்கு வேறு நியாயம் இருக்கமுடியாது'' என்று இவர்கள் கூறிக் கடவுளை நொந்து கொள்வதைக் காணலாம்.

சாதாரண அறிவுடைய மக்கள் தங்களுக்குத் துன்பம் நேர்ந்த சமயத்தில் கடவுள் பாரபட்சமாகத்தான் நடத்துகிறார் என்று இவ்விதம் எண்ணுவது இயல்பே.

கடவுள் படைப்பில் உயிர்கள் இப்படிப் பலவிதமான பிறவிகளாகப் பிறந்து துன்புறுவதற்கு ஏதாவது நியாயம் இருந்தே தீரவேண்டும் என்பதை இவர்கள் சரியாய் ஆராய்ந்து சிந்தித்துப் பாராததே இதற்குக் காரணம்.

தனவந்தனும் இன்பதுன்பத்தை அநுபவிக்கிறுன், தரித்திரனும் இன்பதுன்பத்தை அநுபவிக்கிறுன். இருப்பவனுக்கும் இல்லாதவனுக்கும் ஏற்படும் இந்த இன்ப துன்பம், ''விரலுக்குத் தக்க வீக்கம்'' என்பது போன்ற ஒரு வித்தியாசத்தால் மட்டும் மாறுபடுகிறது. மற்றபடி இன்ப துன்பம் எல்லோருக்குமே பொதுவானதுதான். ''பாலுக்குச் சக்கரை இல்லை'' என்பாருக்கும் ''கூழுக்கு உப்பில்லை'' என்பாருக்கும் உள்ள துன்பம் ஒரே மாதிரிதானே இருக்கிறது.

## முற்பிறப்பின் வினைப்பயன்.

அப்படியானுல் இதற்குக் காரணம்? மனிதர் முற்பிறப்பில் செய்த நல்வினை தீவினைகளே. அதற்கேற்றபடியான தண்டனையை அவர்களின் மறுபிறப்பில் அநுபவிக்கும்படி கடவுள் விதித்துள்ளார். இந்த விதியின் நியமப்படியே இந்த இன்பதுன்பம், உயர்வு தாழ்வுகள் எல்லாம் நடக்கின்றன.

இப் பிரபஞ்சமே ஒரு நியதிக்கு—ஒரு விதிக்கு கட்டுப்பட்டு இயங்கிவருகிறது. மனிதரும் அவ்விதிக்குக் கட்டுப்பட்டவர்களே. அவர்களின் வாழ்க்கையில் வரும் இன்பதுன்பங்களும் அவ்விதிக்கு உட்பட்டுத்தானே இருக்கும்.

இந்த உண்மையை உணர்ந்தவர் துன்பப்படவேண்டிய அவசியம் இல்லை; கடவுளை நொந்துகொள்ள வேண்டிய அவசியமும் இல்லை.

''செய்த தீவினையிருக்க தெய்வத்தை நொந்தக்கால்
எய்தவருமோ இருநிதியம்.......''

என்றனர் முன்னேர்.

''வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்தலரிது''



என்று நாயனுரும் தம் குறளின் ஊழ் அதிகாரத்தில் கூறுகின்ருர். இதிலிருந்து, விதியின் வலிமைதான் நம் இன்ப துன்பங்களுக்குக் காரணமாகிறது என்பது விளங்கும்.

இதனை நம்பாமல், ''மறுபிறப்பாவது முற்பிறப்பாவது, இதனையெல்லாம் யார் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.'' என்று குயுக்திவாதம் பேசுபவர்கள் பேசட்டும். இப்படிப் பேசிப் பேசிதான் இவர்கள் தீய நெறிகளில் நடந்து பாப மூட்டைகளைச் சுமந்து மீளாப் பிறவித் துன்பத்தை அடைகிருர்கள்.

விதியின் விளையாட்டை சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், கந்தபுராணம், இராமாயணம், பாரதம் முதலான பல பழைய நூல்களும் நமக்கு உணர்த்துகின்றன.

"சாதலும் பிறத்தல்தானும் தன்வினைப்பயத்திஞகும்
ஆதலும் அழிவுமெல்லாம் அவை பொருட்கியல்பு கண்டாய்
நோதலும் பிரிவுமெல்லாம் நுண்ணுணர்வின்மை யன்றே
பேதை நீ செரிதும் பொல்லாய் பெய்வளைத்தோளி யென்ருன்''
(சீவக சிந்தாமணி)

''ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந்துறும்'' (குறள்)

''ஊழ்வினை உருத்துவந்து காட்டும்'' (சிலப்பதிகாரம்)

இறைவனையும் ஞானிகளையும் தவிர்ந்த ஏனையோர்க்கு ஊழ்வினையிஞல் உண்டாகும் விளைவு நீங்காது என்று கச்சியப்பர் கூறுகின்ருர்.

''நினைவரும் கண்ணுதல் நிமலர்க்கேயலால்
அனையனை அடைதரும் அறிஞர்க்கேயலால்
எனைவகையோர்க்கும் எவ் வுயிர்க்குமேற்பதோர்
வினைபடும் இழிதுயர் விட்டு நீங்குமோ''

என்பது அவரின் திருவாய் மொழி. இத்தகைய காரணங்களினுல் விதியை வெல்லுவதற்கு எவராலும் முடியாதென்பது புலப்படும்.

## விதியை வெல்ல முடியாதா?

விதியை மதியினுல் வென்றுவிடலாம் என்பது சிலரின் நம்பிக்கை. அது அவ்வளவு எளிதல்ல. பரீட்சித்து மன்னன் வானசோதிட வல்லுனரான பாஸ்கராசாரியரின் புதல்வி லீலாவதி, விக்கிரமாதித்த மன்னனுடைய புதல்வன் முதலான பலபேருக்கு நேர்ந்த கதி இதற்குச் சான்ருகும். இவர்கள் எவ்வளவோ முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொண்டிருந்தும் விதியை தடுத்துக்கொள்ள முடியாமற் போய்விட்டது.

விதியை மதியால் வெல்லலாம் என்று கூறுபவர்கள், இந்த மதி என்பதன் நுட்பத்தைச் சரியாய்த் தெரிந்து கொள்ளவேண்டும். அதாவது விதியை வெல்லுவதற்கு மதியைச் சரியான வழியில் செலுத்தத் தெரிந்துகொள்ள வேண்டும். சரியான வழி என்பது, நல்லறிவைச் செலுத்தி நற்செய்கைகளைச் செய்யவேண்டும். இதில் முக்கியமானது கடவுள் பக்தி.

இந்த பக்தி செலுத்தும் மதியினுல்தான் விதியை ஒருவாறு நீக்கிக்கொள்ள முடியும் என்பது ஞானிகள் கண்ட வழி. உண்மை மனதுடன் வருந்தித் துதித்து தன் பாபங்களை மன்னிக்கும்படி கடவுளை வேண்டிக்கொண்டாலுங்கூட அறியாமையினுல் செய்த பாபமே ஒருவேளை மன்னிப்புக்குரியதாக இருக்கலாம்.

ஆனுல் மனமறிய பாபம் எனத் தெரிந்து கொண்டே தீமை புரிபவர்களின் பாபவினை ஒருக்காலும் மன்னிக்கப்படமாட்டாது. இறைவன் மேல் உண்மைப் பக்தியுடன் இருந்ததாலேயே பிரகலாதன், கண்ணப்பநாயனுர், மார்க்கண்டேயர் முதலியோர்களின் விதி நீங்கப்பெற்றது.



அவ்வித மனேபாவத்துடன் பக்தி செலுத்துகிறவர்கள் இப்போது யாராவது உண்டா? 'வண்ணனை வழிமறித்துப் பிடுங்கி வள்ளுவனுக்குத் தானம் செய்வது' போல, மக்களை ஏமாற்றிக் கொள்ளைலாபமடித்துச் சம்பாதித்து கோயிலுக்கும் திருவிழாவுக்கும் தடபுடலாகச் செலவு செய்து பக்தி செலுத்துவதனுல் ஒருபோதும் மன்னிப்புபெற முடியாது.

"வினையது வினையின் வந்த விவருந்துன்ப முன்னீர்
கனைகடலழுவ நீந்திக் கண்கனிந்திரங்கல் வேண்டா
நனைமலர்ப்பிண்டி நாதனலங்கிளாப் பாதமூல
நினையுமி னீவிரெல்லாம் நீங்குமினச்சம்"

(சீவகசிந்தாமணி)

"நாளென் செயும்வினை தானென்செயும் எனைநாடிவந்த
கோளென் செயும் கொடுங் கூற்றென் செயுங் குமரேசரிரு
தாளும் சிலம்பும் சதங்கையுந் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்கு முன்னே வந்து தோன்றிடினே"

என்பதற்கிணங்க, இறைவனிடம் உண்மையாகப் பக்தி செலுத்தினுல்தான் முன்வினைப் பயன் நீங்கும் என்பது இதனுல் உணர்த்தப்படுகின்றது.

ஆனுல், முன்னைய ஊழ்வினை விடுபடுந்தருணமாயிருந்து பிரார்த்தனை பலனை ஒருவன் பெறத் தகுதியுள்ளவனுய்ப் பரிணமிக்கும் போது கடவுளும் அவனுக்கு அந்தப்படியே அநுக்கிரகிக்கிருர். பூர்வ நியமனம் இருப்பினும் நமது பிரார்த்தனைக்கு இரங்கி கடவுள் தமது ஆதிநியமனத்தை மாற்றி விசேஷானுக்கிரகம் செய்வதும் உண்டு. இது ஆதி நியமனத்தைச் சிறிதாவது தழுவியே இருக்கும்.

அதாவது, முற்பிறப்பின் தீவினைப் பயனை முற்றிலும் நீக்கிக்கொள்ள முடியாது. அதற்குரிய தண்டனையை ஓரளவாவது அநுபவித்துத்தான் தூய்மைபெறவேண்டும். தங்கத்தைப் புடம் போட்டுத் தூய்மைப் படுத்துவது போல இது நடக்கவேண்டும்.

ஆகவே, நாமெல்லோரும் நன்னெறிகளில் நடந்து இறைவனை மனமுருகத் தொழுது நம் ஊழ்வினைகளின் கொடிய பலன்களை நீக்கியருளுமாறு வேண்டிக்கொள்வோமாக.

# தேவி மகிமை

- செல்வி. ஜெகதா சாம்பசிவக் குருக்கள் -

உலகம் தோன்றக் காரணமானவள் சக்தி. சக்தி இல்லையேல் இயக்கம் இல்லை.

''இச்சா மாத்ரம் ப்ரபோ; சிருஷ்டி''

'பரப்பிரம்மமாகிய சக்தியின் இச்சையாலேயே இப் பிரபஞ்சம் தோன்றியது' என்பது ஆன்றோர் வாக்கு.

உலகிலே மிகமேம்பட்டது தாயன்பு. அதனால்தான் 'பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து' என்று இறைவனை அடியார்கள் உவந்து கூறுகிறார்கள்.

## அம்பாள் தத்வம்:

சிவம் என்பது ஜடம். சக்தியின் துணைகொண்டு இயங்கினால்தான் உலக இயக்கம் நடைபெறும். இல்லையேல் இயக்கம் நின்றுவிடும். ஒரு சமயம் உமாதேவி சிவனைப் பிரிந்து சென்று மலையரசனுக்கு மகளாக அவதரித்தாள். அப்போது (சக்தி சிவத்தினின்றும் பிரிந்ததால்) உலக இயக்கம் அடங்கிவிட்டது. சிவனும் மோன நிலையிலே மூழ்கி, தக்ஷிணாமூர்த்தியாக அமர்ந்து, ஞான உபதேசம் புரிந்தார். சூரனின் கொடுமையைத் தாங்க முடியாத தேவர்கள், சிவனைத் துதித்தார்கள். சக்தியைத் திருமணம்புரிந்து அதன் மூலம் ஒரு குமாரனைத் தோற்றுவித்ததால் சூரன் அழிந்தான்.

''க்ஷண சலிதயோர்ப்ரூலதிகயோ; ஜகதஸூதேதா
ஹரிரவதி; ருத்ரக்ஷபயதே;'' (ஸௌலகர்)



ஒருகணம் பராசக்தி புருவத்தை நெரிக்கிறாள். உடனே பிரம்மா படைக்கிறார். விஷ்ணு பரிபாலனம் பண்ணுகிறார். ருத்ரன் சம்ஹாரம் செய்கிறான். இவ்வாறு அன்னையின் ஆக்ஞையின் கீழ் முத்தொழில்களும் நடைபெறுகின்றன.

''சிருஷ்டி ஸ்திதி சம்ஹார, திரோபவ, அனுக்கிரக
பஞ்சகிருத்திய காரண்ஸ்ய பகவதீம்''
என்று வேதமந்திரங்கள் கூறுகின்றன.

சாக்ஷாத் ஈசுவரனுடைய அம்சமே ஆதிசங்கர பகவத் பாதர். 'வேதநெறி தழைத்தோங்க, மிகு சைவத்துறை விளங்க'வும், தேவர்களின் வேண்டுதல் பிரகாரம் பூமியிலே அவதரித்தார். சங்கரராக அம்பாளைப்பற்றி ''ஸௌந்தர்ய லஹரி'' என்னும் கிரந்தத்தைப் பாடியிருக்கிறார். அன்னையின் அருளைப்பற்றி அறிய அதை முழுதும் படித்தாலே போதும்.

சாதாரண கவிஞர்கள் பாடிய பாட்டல்ல. எம்பெருமானே அம்பிகையைப் பற்றிப் பாடியிருக்கிறதானால் அதில் எவ்வளவு விசேஷம் இருக்கும். அதிலே ஒரு பாட்டு:

''சிவஸ் ஸக்த்யா யுக்தோ யதிபவதி ஸக்த
ப்ரபவிதும் நசே தேவம் தேவோ நகலுகுசல''

சிவன் சக்தியுடன் கூடியிருக்கிறபோது உலகைப் படைக்க சக்தியுள்ளவராகிறார். இல்லையேல் அசையக்கூட அவரால் முடியாது.

இறைவனுக்கும் அம்பாளுக்கும் உள்ள சம்பந்தம் எப்பேர்ப்பட்டது? சரீர, சரீரி பாவத்தைப் போன்றது. உடலுக்கும் உயிருக்குமுள்ள தொடர்பைப் போன்றது.

''சரீரம் தவம் சாம்போ'' ஸஸிமிஹீரவக்ஷோருஹ
— யுகம்

சர்வ ஜகத்தும் பரமேஸ்வரனுடைய சரீரம். அதற்கு கவசம் போன்றிருப்பது அம்பிகையின் சரீரம். உலகுயிர்களாகிய தன் குழந்தைகட்கு, சூரிய சந்திரன் என்ற இரண்டு ஸ்தனங்களினின்று அமுத தாரை பொழிந்து, காக்கிறாள்.

''மனஸ்த்வம், வ்யோமத்வம், மருதஸி, மருத்ஸாரதி ரஸி'' பஞ்சபூதங்கள், அதற்கு மேலான மனசு, ஆகாசம், அக்கினி, காற்று, ஜலம், பூமி எல்லாம் நீயே.

''த்வயி பரிணதாயாம், நஹிபரம்''

நீயே எல்லா ரூபமாகவும் விளங்குகிறாய். நீ அல்லால் வேறு கிடையாது. எம்மிடமிருக்கும் ஞானம், ஆனந்தம் எல்லாவற்றிற்கும் ஆதாரமாக, 'சித் ஆநந்த' ரூபமாக இருப்பவளும் நீ. இப்பிரபஞ்சம் முழுவதிலும் உன் பரிணாமத்தைத் தவிர வேறு கிடையாது'' என்று அழகாக விளக்கம் கொடுக்கிறார் ஆதிசங்கரர்.

லியே புரஹரஜாயே மாயே
தவதருண வல்லபச்சாயே'

என்று மூக கவி பாடிய ஸ்லோகத்தில், அம்பாளை ''மாயா'' என்று வருகிறது. 'யாமா' எது இல்லையோ அதுதான் மாயை.

'மாயாஸ்வரூபிணியான அம்பிகை இளந்தளிரைப் போன்ற எழிலும் நிறமும் உடையவள்' என்று வர்ணிக்கிறார்.

அம்பிகையின் ஸ்வரூபம், காற்று. ஆகாசம் என்பதைக் காட்டிலும் சூட்சுமமானது, உருவமில்லாத வஸ்துவான பரப்பிரம்மம் பக்தர்களுக்காக பல வடிவங்களைக் கொள்கிறது எப்படி?

நெய் திரவமாக இருக்கும்போது அதற்கு வர்ணம் இல்லை. அதுவே, சீதளம் அதிகமாகிவிட்டால் உறைந்து வெளுப்பு வர்ணம் கொண்டதாகிறது. இதைப்போல, அடியவர்கள் உள்ளத்தில் அன்புச்சீதளம் அதிகமாகிவிட்டால், அகண்டாகாரமான ப்ரும்மஸ்வரூபம் நமக்காக ஒரு உருவை எடுத்துக்கொண்டு அநுக்கிரகம் பண்ணுகிறது.

முத்தொழிலுக்கும் காரணமானவள் அம்பிகை என்று லலிதா ஸகஸ்ர நாமம் உரைக்கிறது.

''சிருஷ்டி கர்த்ரீ, ப்ரஹ்மரூபா
கோப்த்ரீ கோவிந்த ரூபிணி



ஸம்ஹாரிணீ ருத்ரரூபா
திரோதாநகரீஸ்வரி
சதாசிவானுக்கிரஹதா
பஞ்ச கிருத்ய பராயணா''

## உபநிஷதக் கதை:

முன்னொரு ஞான்று தேவாசுர யுத்தம் நடந்து, தேவர்கள் வெற்றி பெற்றனர். 'நம்முடைய பலத்தினாலே வெற்றி கிடைத்தது' என்று ஆணவமுனைப்புக் கொண்டு ஆண்டவனை மறந்தனர். அவர்களது அறியாமையைப் போக்கவும், அனைத்துக்கும் மூலகாரணமான பரம்பொருள் ஒன்று உண்டு என்பதை விளக்கவும், பரம்பொருள் அவர்கள் முன்னே தோன்றியது.

அது இன்னதென்று கூறமுடியாத யக்ஷ வடிவமாக — ப்ரும்ம ஸ்வரூபமாக — விளங்கியது. இந்திரன் அதனைக் கண்டு, அக்கினியை அனுப்பி, இன்னதென்று அறிந்து வரும்படி சொன்னான். அக்கினி தேவன் அவ்வடிவத்தின் முன் சென்று, 'நீ யார்?' என்றதும், அவனையே திருப்பி 'நீ யார்?' என்றது.

நான் அக்கினிதேவன். என்னால் எந்த வஸ்துவையும் பஸ்பமாக்க முடியும். என்று இறுமாப்புடன் கூறினான்.

'சரி. இதோ இந்த சிறு துரும்பைத்தகி' என்றதும் அக்கினி பல வழிகளிலும் முயன்று பார்த்தும் முடியாது வெட்கித் திரும்பினான். இவ்வாறு வாயு, வருணன் போன்ற தேவர்கள் சென்று அக்கினியைப் போலவே திரும்பி வந்தனர். இறுதியில், இந்திரனுக்கு நல்லுணர்வு வர, ஆணவம் அடங்கித் தானே அவ்விடம் சென்று பார்த்தான்.

ஆணவம் நீங்கியவுடன் இந்திரனுக்கு அருள்புரியத் திருவுளம் கொண்டது பரம்பொருள். யக்ஷ வடிவம் மறைந்து, அவ்விடத்தில், சர்வாபரணபூஷிதையாக, 'ஹைமவதி' என்ற நாமத்தோடு உமாதேவி தோன்றி இந்திரனுக்கு அநுக்கிரகம் புரிந்தாள். 'சற்று முன் இங்கே நின்ற வடிவம் யாது?' என்று வினவ,

''நீ பார்த்தது ப்ரம்மஸ்வரூபம், உனக்கும் சகல தேவர்களுக்கும் அனைத்துக்கும் மூலகாரணமாய் இருப்பதும் அதுவே என்று உணர்வாயாக!'' என்று கூறினாள்.

"நல்ல குருநாதன் நம்மை வருத்துவது
கொல்லவல்ல கொல்லவல்ல, நம்
பொல்லாக் குணங்கள் போக்க"

இப்படியாக அகந்தையடங்கிய இந்திரன் மாத்திரமே அம்பிகையைக் காண முடிந்தது.

## பக்தர்கள் பொருட்டு பல வடிவுகள்:

உலகமே அவளது உருவு "சர்வமும் சக்திமயம்." அப்படியிருந்தும் பக்தர்களின் பொருட்டு பல வடிவங்களை எடுக்கிறாள்.

பிரளயகாலத்தின் போது, விஷ்ணு யோக நித்திரை செய்தார். அப்போது அவர் காதினின்றும் 'மது கைடபர்' என்ற இரு அரக்கர் தோன்றி, பிரம்மாவைக் கொல்ல முற்பட்டனர். பிரம்மா பகவதியைத் துதிக்க, அவள் விஷ்ணுவின் திருமேனியினின்றும் "தாமஸீ தேவி"யாகத் தோன்றினாள். அசுரரை அழிக்கும் வல்லமையை விஷ்ணுவுக்குக் கொடுக்க அவர் அவர்களை அழித்தார்.

ஒரு சமயம் தேவாசுர யுத்தத்தின் போது, அசுரர்கள் வெற்றி பெற்று, "மகிஷாசுரன்" தேவலோகத்தைக் கைப்பற்றி கொடுங்கோலாச்சி வந்தான். அவனது கொடுமை தாங்காது தேவர்கள் இறைவனிடம் சென்று முறையிட்டனர். அப்பொழுது, கடுங்கோபங் கொண்ட சிவன், விஷ்ணு பிரம்மா என்ற திரிமூர்த்திகளின் முகங்களினின்றும் பேரொளிப் பிழம்பு வெளிப்போந்தது. மற்றைய தேவர்களின் திருமேனிகளிலிருந்தும் அவ்வாறே ஒளி வெள்ளம் பெருகி ஒன்றாகச் சேர்ந்தது. அவ்வாறு சேர்ந்த ஒளிப்பிழம்பு ஓர் பெண் உருவாக மாறியது. மற்றைய தேவர்களின் ஒளியினால் பெண்ணுருவின் அங்கங்கள் அமைந்தன.

இவ்வாறு, மகிஷனை வதம் செய்வதற்காக, "சண்டிகாதேவி" ஆவிர்ப்பவித்தாள். தேவர்களினால் ஆயுதங்களும், ஆபரணங்களும் அளிக்கப் பெற்று மகிஷாசுரனை வதம் செய்து, "மகிஷாசுர மர்த்தனி" யாகத் திரும்பினாள்.

இந்த மகிஷாசுர மர்த்தனியைக் குறித்தே "நவராத்திரி" விழாக் கொண்டாடுகிறோம்.

தேவி ஒன்பது நாட்களும் விரதமிருந்து, பத்தாம் நாள் அசுரனை மர்த்தனம் செய்தாள். அதனையே "விஜயதசமி" என்கிறோம்.

சும்ப நிசும்பர்களை அழிக்கும் பொருட்டுப் பார்வதி தேவியின் சரீரத்தினின்றும் தோன்றினவள் "கௌசிகி" தேவி.

இவ்வாறு துஷ்டநிக்கிரக சிஷ்ட பரிபாலனம் பண்ண, உலகமாதாவான பராசக்தி பல வடிவங்களைக் கொண்டு உயிர்களைக் காக்கிறாள்.

## வழிபாடு

அன்னையைத் தெய்வமாக வழிபடுவதை எல்லா மதங்களும் ஒப்புக் கொள்கின்றன. 'அகவழிபாடு, புறவழிபாடு' என்ற இரண்டினாலும் அவளை வழிபடலாம்.

**அகவழிபாடு:-** (அந்தர்முகம்) அன்னையை வழிபடும் அந்தர்முக உபாஸகன், பூர்வபுண்ணியத்தால், நல்ல குருவருள் பெற்று ஞானம் அடைகிறான். யோக நிலையில் நின்று 'நான்' என்பதடங்கி பரப்ரும்மத்தோடு ஒன்றும் நிலை பெறுகிறான். ஆத்மா வேறு, உடல் வேறு. என்று உணர்ந்து, 'காயமே கோயிலாகக்' கொண்டு ஆத்ம பூஜை செய்து சக்தியோடு இரண்டறக் கலந்து விடுகின்றான். இதனை வெகு அழகாக ஆசார்ய சுவாமிகள் கூறுகிறார்.

"ஜபோ ஜல்ப! சில்பம் ஸகலமபிமுத்ரா விரசனா
கதி ப்ராதக்ஷிண்ய க்ரணம அசனாத் யாஹுதிவிதி
ப்ரணவ ஸம்வேச; ஸுகம் அகிலம் ஆத்மார்ப்பணத்சோ
ஸபர்யா - பர்யாயஸ் தவபவது யன்மே விலஸிதம்"

—ஸௌந்தர்யலஹரி—

இவர்கள் நடப்பதெல்லாம் பிரதக்ஷிணம். பேசுவதெல்லாம் மந்திர ஜெபம். கை கால் அசைவதெல்லாம் முத்திரைகள். இப்படியே தானாக நிகழும் செயல்கள் எல்லாமே பூஜையாகும். இவ்வழிபாட்டால் உபாஸகன், இடா, பிங்கலையின் இடையுள்ள 'சுஷும்னா' நாடி வழியாக பிராணவாயுவை மூலாதாரத்தில் செலுத்தி, அங்கு யோக நித்திரையிலிருக்கும் 'குண்டலினி சக்தி'யை எழுப்பி மேற்செலுத்தி யோகத்தால் ஆறு ஆதாரங்களையும் மூன்று முடிச்சுக்களையும் கடந்து ஸகஸ்ர தளபத்மத்தில் இருக்கும் சதாஸிவத்துடன் சேர்கிறான். அந்தச் சேர்க்கையினால் சிவம் மறைந்து சக்திமட்டுமே ஜ்வலிக்கிறது.

## வர்ணனை:

மேருவின் உச்சியில் முக்கோணமாகவுள்ளது பிந்து. இது அமைந்திருக்கும் 43-வது முக்கோணமே சகஸ்ர தளம். கீழே அதைச்சுற்றி எட்டு முக்கோணங்கள். அதற்குக் கீழ் வரிசைக்குப் பத்தாக இருவரிசை முக்கோணங்கள். அதனைச்சுற்றி தாமரை இதழ் போன்ற எட்டுத் தளங்கள். அவற்றின் கீழ் சுற்றிலும் 16 தாமரை இதழ்கள். பின் 'திரிரேகா' எனப்படும் மூன்று வட்டமான வளையங்கள். இவை எல்லாவற்றையும் சுற்றி, மூன்று வரிசைகளாலான நான்கு வாயில்கள் கொண்ட 'பூபுரம்'' என்ற சதுரவடிவான சுவர்கள்.

இதுவே, ஸ்ரீமேரு - ஸ்ரீ சக்கரத்தின் அமைப்பாகும். பிந்துவிலிருந்து கீழ்நோக்கிக் காணும் 5 கோணங்கள் சக்திபரம். மேல் நோக்கிக் காணப்படும் 4 முக்கோணங்களும் சிவபரம். பிந்து ஸ்தானத்தில் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி சகல தேவர்களும், சக்திகளும் புடைசூழ, மஹாதிரிபுரஸுந்தரியாக, சிவ — சக்தி ஐக்கிய ரூபிணியாக வீற்றிருக்கிறாள்.

இந்த பரப்ரும ஸ்வரூபமே பராசக்தியாகும்.

Registered at the G. P. O. as a Newspaper M. L. 59/300.

# சந்தா நேயர்களுக்கு!

அன்புடையீர்,

இறைவன் திருவருளினாலும்,
மகான்களின் நல்லாசியினாலும்,
அன்பர்களின் நல்லெண்ணத்தினாலும்
இம்மாதத்துடன் ஆத்மஜோதிக்கு 24-ஆவது ஆண்டு பூர்த்தியாகி அடுத்த மாதத்தில் 25ஆவது ஆண்டு ஆரம்பமாகிறது என்பதை மிக மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

சந்தா நேயர்கள் ஒவ்வொருவரும் தமது சந்தாவை உரிய காலத்தில் அனுப்பி வைப்பதோடு ஒவ்வொரு புதிய அன்பர்களைச் சேர்த்து உதவினால் ஆத்மீகம் பரவுவதற்கு உதவி செய்தவர்களாவீர்கள்.

ஆத்மஜோதியின் வெள்ளிவிழாவை முன்னிட்டு பெரிய அளவில் மலர் ஒன்றும் தயாராகிக்கொண்டு இருக்கிறது என்ற சந்தோஷச் செய்தியை அன்பர்களுக்கு அறியச் செய்வதில் மகிழ்வு கொள்ளுகின்றோம். மலரின் விலை விபரங்கள் பின்பு அறியத் தருவோம்.

## ஆத்மஜோதி நிலையம்,

## நாவலப்பிட்டி, (இலங்கை).

அச்சிடுவிப்போர்:- ஆத்மஜோதி நிலையத்தினர்.
அச்சிடுவோர்:- ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகத்தினர்.
வெளியிட்ட திகதி:- 17-10-72.